

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் (8.11.2024) தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், "மக்களைத் தேடி மருத்துவம்" திட்டத்திற்கு வழங்கப்பட்ட ஐக்கிய நாடுகள் அமைப்பின் 2024ஆம் ஆண்டிற்கான "United Nation Interagency Task Force Award விருதினை காண்பித்து வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. சுப்ரியா சாஹூ, தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் திருமதி. ஷில்பா பிரபாகர் சதீஷ், பொது சுகாதாரம் மற்றும் மருந்துத் துறை இயக்குநர் மரு.செல்வவிநாயகம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் (8.11.2024) தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையத்தின் சார்பில் உணவு பாதுகாப்பு துறையில் மாநில உணவு பாதுகாப்பு குறியீட்டிற்கான செயல்பாட்டில் தமிழ்நாடு இந்திய அளவில் இரண்டாவது இடம் பெற்றதற்காக வழங்கப்பட்ட விருதினை காண்பித்து வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. சுப்ரியா சாஹூ, பொது சுகாதாரம் மற்றும் மருந்துத் துறை இயக்குநர் மரு. செல்வவிநாயகம், உணவு பாதுகாப்புத் துறை கூடுதல் ஆணையர் மரு. டி.எ. தேவபார்த்தசாரதி, கடலூர் மற்றும் வேலூர் மாவட்ட நியமன அலுவலர்கள் உடனிருந்தனர்.

### உணவுப் பாதுகாப்புக் குறியீட்டிற்கான செயல்பாட்டில் - தமிழ்நாடு இந்திய அளவில் இரண்டாம் இடம்!

# "மக்களைத் தேடி மருத்துவம்" திட்டத்திற்கு ஐக்கிய நாடுகள் அமைப்பின் விருது!

## முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் காண்பித்து - அமைச்சர் மா. சுப்பிரமணியன் வாழ்த்துப் பெற்றார் !

சென்னை, நவ.10 -

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் (8.11.2024) தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், "மக்களைத் தேடி மருத்துவம்" திட்டத்திற்கு வழங்கப்பட்ட ஐக்கிய நாடுகள் அமைப்பின் 2024ஆம் ஆண்டிற்கான "*United Nation Interagency Task Force Award*" விருது மற்றும் இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையத்தின் சார்பில் உணவு பாதுகாப்பு துறையில் மாநில உணவு பாதுகாப்பு குறியீட்டிற்கான செயல்பாட்டில் தமிழ்நாடு இந்திய அளவில் இரண்டாவது இடம் பெற்றதற்காக வழங்கப்பட்ட விருது, ஆகிய இரண்டு விருதுகளை காண்பித்து வாழ்த்துப் பெற்றார்.

"மக்களைத் தேடி மருத்துவம்" திட்டத்திற்கு ஐக்கிய நாடுகள் அமைப்பின் விருது பெருகி வரும் தொற்றா நோய்களின் பாதிப்புகளை எதிர்கொள்ளும் விதமாக "மக்களைத் தேடி மருத்துவம்" எனும் உன்னதமான திட்டம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 5.8.2021 அன்று கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தொடங்கி வைக்கப்பட்டது.

தமிழ்நாடு முழுவதும் பயனாளிகளின் இல்லங்களுக்கே சென்று 18 வயதிற்கு மேற்பட்டோருக்கு உயர் இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோய்க்கான பரிசோதனை, 45 வயதிற்கு மேற்பட்ட மற்றும் இயலாமையில் உள்ள நபர்களுக்கு தொற்றா நோய்க்கான மருந்து பெட்டகம் வழங்குதல், இயன்முறை சிகிச்சை சேவை, நோய் ஆதரவு சிகிச்சை, CAPD டயாலிசிஸ் பேக் வழங்குதல் ஆகிய சேவைகள் வழங்கப்படுகிறது.

இத்திட்டம் துவங்கப்பட்டதிலிருந்து 7.11.2024 வரை மாநில அளவில் 1,98,25,487 பயனாளிகள் முதன் முறை சேவைகளையும் 4,22,79,337 பயனாளிகள் தொடர்சேவைகளையும் பெற்று வருகின்றனர்.

இத்திட்டத்தின் தொடர்ச்சியாக இதயம் பாதுகாப்போம் திட்டம், சிறுநீரகம் காக்கும் சீர்மிகு திட்டம், தொழிலாளர்களை தேடி மருத்துவம், சமுதாய அளவிலான புற்றுநோய் கண்டறியும் திட்டம், நடப்போம் நலம் பெறுவோம் திட்டம், பாதம் பாதுகாக்கும் திட்டம், சிறுநீரகம் - விழித்திரை பாதிப்புகளை சீர் செய்யும் மருத்துவம் ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில் 25 செப்டம்பர் 2024 அன்று நியூயார்க்கில் நடந்த 79வது ஐ.நா.பொது சபையின் லெவன்த் பிரண்ட்ஸ் ஆப் தி டாஸ்க் போர்ஸ் கூட்டத்தில் 2024க்கான டாஸ்க் போர்ஸ் விருதுகள் (*Task Force Awards* 2024) அறிவிக்கப்பட்டது. புதுமை மற்றும் தொழில் நுட்பத்தை மேம்படுத்தல் உட்பட தொற்றாநோய்கள் மற்றும் மனநலம் தொடர்பான சிறந்த பணிகளை அங்கீகரிக்கின்றன. உலக சுகாதார அமைப்பின் கொள்கை மற்றும் தர நிலையுடன் இணைந்து திறனுதவித் தொழில் நுட்பவியல் (*assistive technology*) பணியின் முக்கியத்துவத் தினை அங்கீகரிக்க இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன.

அதில் சுகாதார அமைச்சகங்கள் அல்லது சுகாதார அமைச்சகத்தின் கீழ் உள்ள அரசு நிறுவனம் என்ற பிரிவின் கீழ் தமிழ்நாடு அரசின் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் முதன்மை திட்டமான மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்திற்கு விருது அறிவிக்கப்பட்டு, வழங்கப்பட்டுள்ளது,

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி தொற்றாநோய் தாக்கத்திலிருந்து மக்களைப் பாதுகாக்கும் நோக்கில் பல்வேறு தொலைநோக்குத் திட்டங்களை செயல்படுத்தி "மக்களைத் தேடி மருத்துவம்" தமிழ்நாட்டை உலகத்திற்கே முன்மாதிரியான மாநிலமாக விளங்கச் செய்கிறது.

பொதுமக்களுக்கு தரமான, பாதுகாப்பான உணவு வழங்கப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு தமிழ்நாடு உணவுப் பாதுகாப்புத் துறை பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

கடந்த 20.09.2024 அன்று "*Global Food Regulators Summit*2024", பாரத் மண்டபம், புதுடில்லியில் நடைபெற்ற விழாவில், இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையத்தால் உணவு பாதுகாப்பு துறையில் மனித வளம் மற்றும் நிறுவனங்களைப் பற்றிய தரவுகள், தர நிர்ணய விதிமுறைகளைப் பின்பற்றுதல், உணவு பொருட்களைப் பரிசோதிப்பதற்கான கட்டமைப்பு மற்றும் கண்காணிப்பு, பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு மற்றும் நுகர்வோருக்கு அதிகாரமளித்தல் ஆகிய ஐந்து குறியீடுகளின் அடிப்படையில் தர மதிப்பீடு செய்து, 2023-24ஆம் ஆண்டிற்கான மாநில உணவு பாதுகாப்பு குறியீட்டிற்கான செயல்பாட்டில் இந்திய அளவில் இரண்டாவது மாநிலமாக, தமிழ்நாடு தேர்வு செய்யப்பட்டு விருது வழங்கப்பட்டது.

இந்திய அளவில் மாநில உணவு பாதுகாப்பு குறியீட்டிற்கான செயல்பாட்டில் கடந்த மூன்று வருடங்களாக தமிழ்நாடு உணவு பாதுகாப்புத் துறையானது, தொடர்ந்து முதல் மூன்று இடங்களைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. சுப்ரியா சாஹூ, குழும இயக்குநர், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் திருமதி. ஷில்பா பிரபாகர் சதீஷ், பொது சுகாதாரம் மற்றும் மருந்துத் துறை இயக்குநர் மரு. செல்வவிநாயகம், உணவு பாதுகாப்புத் துறை கூடுதல் ஆணையர் மரு. டி.எ. தேவபார்த்தசாரதி, கடலூர் மற்றும் வேலூர் மாவட்ட நியமன அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

### தருமபுரி மாவட்டம் வத்தல் மலை - ஒகேனக்கல் பகுதிகளில்

# சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் நேரில் பார்வையிட்டு, ஆய்வு!

தருமபுரி, நவ. 10-

தருமபுரியில் சுற்றுலாவை மேம்படுத்தும் வகையில் சுற்றுலாத்துறையின் சார்பில் வத்தல் மலையில் ரூ.2.23 கோடி மதிப்பீட்டில் சாகச சுற்றுலா மற்றும் திறந்தவெளி முகாம்கள் அமைக்கப்பட்டு வரும் பல்வேறு பணிகள் மற்றும் பென்னாகரம் வட்டம், ஒகேனக்கல்லில் ரூ.17.58 கோடி மதிப்பீட்டில் ஒகேனக்கல் சுற்றுலா மையத்தை நவீன முறையில் மேம்படுத்தும் பணியினை சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர். ராஜேந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கி.சாந்தி, முன்னிலையில் நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் தெரிவித்ததாவது:

சுற்றுலாவானது அறிவு வளர்ச்சிக்கு மட்டுமின்றி மன மகிழ்ச்சிக்கும் அடிப்படை காரணியாக விளங்குகிறது. ஒரு நாட்டினுடைய பொருளாதாரத்தை மேம்படுத்துவதோடு அந்நிய செலவாணியை பெருமளவில் ஈட்டித்தருகிறது. சுற்றுலா ஒரு தொழில் (INDUSTRY) அந்தஸ்தாக அறிவிக்கப்பட்டு மிக வேகமாக வளர்ந்து வருகிறது. பொருளாதார வளத்தை வேகமாக வளர்க்கும் தன்மை சுற்றுலாவுக்கு உண்டு. இந்தியாவிற்கு வருகை தரும் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளின் வருகை அதிகரித்து வருகிறது. அதே போன்று தமிழ்நாட்டிற்கு கலாச்சாரம், கோவில்களில் கட்டிடக்கலைகள், பாரம்பரியம் மற்றும் வாழ்க்கை முறை ஆகியவற்றை பற்றி அறியும் நோக்கில் வரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கையும் ஆண்டு தோறும் அதிகரித்து வருகிறது.தமிழ்நாடு ஒரு மிக சிறந்த சுற்றுலா இடங்களை பெற்ற மாநிலமாக திகழ்கிறது.

தமிழ்நாட்டில் பாரம்பரிய மிக்க நினைவுச் சின்னங்கள், தொன்மையான கட்டிடக்கலைகள், சதுப்புநிலக்காடுகள், இயற்கை எழில் நிறைந்த மலைவாழ் சிறப்பிடங்கள், அழகான கடற்கரைகள், அருவிகள், வனவிலங்கு சரணாலயங்கள், சிற்பக்கலைகள்,இசை மற்றும் நாடகம் ஆகியவற்றை கொண்டுள்ளது. இவை அனைத்தும் தமிழ்நாட்டின் சிறந்த சுற்றுலா வளங்களாகும்.

தருமபுரியின் பழங்காலப் பெயர் தான் தகடூர். ஔவைக்கு நெல்லிக்கனி ஈந்த அதியமான் என்ற இடம்தான் தகடூர். இம்மாவட்டத்தில் சுற்றுலாப் பயணிகள் விரும்பும் ஒகேனக்கல் அருவி முக்கிய சுற்றுலாத்தலமாக திகழ்கிறது. ஒகேனக்கல்லில் ஆர்ப்பரித்து வரும் காவேரி நதிநீர் இங்குள்ள பாறைகளின்மீது மோதுவதால் ஏற்படும் புகைபோன்ற சாரலின் தோற்றமே தனி அழகு. அதனால்தான் புகைக்கும்கல் அதாவது ஒகேனக்கல் என்று அழைக்கப்படுகிறது. விடுமுறை நாட்களை குடும்பத்துடன் உற்சாகமாக களிக்கும் வகையில், ஒகேனக்கல்லுக்கு அதிக அளவில் சுற்றுலாப்பயணிகள் பிற மாநிலத்திலிருந்தும், தமிழகத்தின் பல்வேறு மாவட்டத்திலிருந்தும் சுற்றுலாப்பயணிகள் வருகை புரிகின்றனர்.தமிழ்நாட்டில் 2021 ஆம் ஆண்டில் 57,622 ஆக இருந்த வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2022 ஆம் ஆண்டில் 4,07,139 ஆகவும், 2023 ஆம் ஆண்டில் 11,74,899 ஆகவும் உயர்ந்துள்ளது.

தமிழ்நாட்டிற்கு தற்போது 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஜூலை மாதம் வரை 7,24,318 வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளார்கள். அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரிட்டன், ஆஸ்திரேலியா, கனடா, சீனா, மலேசியா, ஜெர்மனி, ரஷ்யா, இலங்கை மற்றும் வங்காளதேசம் ஆகிய நாடுகளிலிருந்து பெரும் அளவில் சுற்றுலா பயணிகள் வருகைபுரிகின்றனர். மேலும், உள்நாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2021 ல் 11,53,36,719 ஆக இருந்து 2022 ல் 21,85,84,846 ஆகவும், 2023 ல் 28,60,11,515 என உயர்ந்துள்ளது. தற்போது தமிழ்நாட்டிற்கு 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஜூலை மாதம் வரை 17,96,27,146 உள்நாட்டு சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளார்கள்.

இதேபோல், தருமபுரி மாவட்டத்திற்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2021ல் 21,96,669 எனவும், 2022ல் 23,99,271 எனவும் 2023ல் 24,39,440 எனவும் உயர்ந்துள்ளது. மேலும், ஒகேனக்கல் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2021 ல் 15,51,190 ஆக இருந்து 2022 ல் 17,70,085 ஆகவும், 2023 ல் 15,67,020 எனவும் உயர்ந்துள்ளது.மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சுற்றுலாத்துறையின் சார்பில் வத்தல்மலையில் சுற்றுலாவை மேம்படுத்தும் பொருட்டு ரூ.2.23 கோடி மதிப்பீட்டில் சாகச சுற்றுலா மற்றும் திறந்த வெளி முகாம்கள் அமைக்கப்பட்டு வரும் பல்வேறு பணிகள் ஆய்வுமேற்கொள்ளப்பட்டு, பணிகளை தரமாகவும், விரைந்து முடித்திட வேண்டுமென அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், பென்னாகரம் வட்டம், ஒகேனக்கல்லில் ரூ.17.58 கோடி மதிப்பீட்டில் ஒகேனக்கல் சுற்றுலா தலம் சர்வதேச அளவில் தரம் உயர்த்த 3.10 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில் நுழைவு வாயில், பார்வையாளர் மாடம், பரிசல் நிறுத்துமிடம், எண்ணை குளியலுக்கான இடங்கள், உடை மாற்றும் அறை மற்றும் பாதுகாப்புடன் குளிக்க வசதி ஏற்படுத்துதல், டிக்கெட் கவுண்டர், பரிசல் நிறுத்துமிடம், பரிசல் சென்றடையும் பகுதி, மசாஜ் பகுதி, ஆழ்துளைக்கிணறு, உணவகம், சொகுசு நடைபாதை, எண்ணெய் கழிவு சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல், காட்சி கோபுரம் போன்ற பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதை குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, பணிகளை தரமாகவும், குறித்த காலத்திற்குள் விரைந்து முடிக்க வேண்டும் எனவும், ஒகேனக்கல் சுற்றுலா மையமானது பல்வேறு மாநிலங்களில் இருந்தும், பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் வரும் சுற்றுலாப்பயணிகளை கவரும் வகையில் இருக்க வேண்டும் எனவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட பணிகள் பயன்பாட்டிற்கு வந்த பிறகு அதிக அளவில் சுற்றுலாப்பயணிகள் தருமபுரி மாவட்டத்திற்கு வருகை புரிவார்கள் என சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர். ராஜேந்திரன் தெரிவித்தார்.

முன்னதாக, தருமபுரி மாவட்டம், வத்தல்மலையில் சாகச சுற்றுலா மற்றும் திறந்த வெளி முகாம்கள் அமைக்கப்பட்டு வரும் பல்வேறு பணிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கி. சாந்தி, முன்னிலை யில் நேரில் பார்வையிட்டு, மரக்கன்றுகளை நட்டு வைத்தார்.இந்த ஆய்வுகளின் போது, தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர்ஆ. மணி, பென்னாகரம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.கே.மணி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.எஸ்.மகேஸ்வரன், சுற்றுலாத்துறை இணை இயக்குநர் புஷ்பராஜ், சுற்றுலாத் துறை செயற்பொறியாளர் பிரபாகரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் தடங்கம் பெ.சுப்பிரமணி, முன்னாள் அமைச்சர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்,முன்னாள் மாவட்ட செயலாளர் பி.என்.பி.இன்பசேகரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்அவைத்தலைவர்கே.மனோகரன்,பென்னாகரம் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி. இரா.கவிதா ராமகிருஷ்ணன், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் என். செல்வராஜ், மாவட்ட சுற்றுலா அலுவலர் உமாசங்கர், உதவி சுற்றுலா அலுவலர் பா.கதிரேசன், வட்டாட்சியர்கள் சண்முகசுந்தரம், சிவக்குமார், ஒன்றிய செயலாளர்கள் எரியூர்.செல்வராஜ், முருகேசன், இல.கிருஷ்ணன், மாவட்ட மீனவர் அணி தலைவர் மிதுன் காளியப்பன், மீனவர் அணி மாவட்ட அமைப்பாளர் ராமகிருஷ்ணன், திருமதி.இலட்சுமி,வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி.கலைமணி, கூத்தபாடி ஊராட்சி மன்ற தலைவர் பாஸ்கர், மாநில, மாவட்ட, ஒன்றிய,பேரூர் கழக நிர்வாகிகள், தொடர்புடைய அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே; 'அ.தி.மு.க.வில் கள ஆய்வு' என்று எடப்பாடி அறிவித்திருக்கிறாரே ?

**பெரியதம்பி :** ஆமாம் தம்பி; கட்சியின் செயல்பாடுகளை நேரடியாக ஆய்வு செய்யப் போகிறாராம்; அதற்குத்தான் இந்தக் கள ஆய்வு என்று அறிவித்திருக்கிறார். இத்தனை ஆண்டுகளும் இதுவரை செய்யாத ஒன்றை இப்போது ஏன் அறிவித்திருக்கிறார்?

"கள ஆய்வில் முதல்வர்"என்று முதலமைச்சர் அறிவித்த திட்டத்திற்கு எதிர்வினை எடப்பாடியின் அறிவிப்பு.

"கள ஆய்வில் முதல்வர்" என்ற திட்டம், சென்ற மாதமே அறிவிக்கப்பட்டது. முதல் கட்டமாக, 5,6 தேதிகளில் கோவைக்கு வந்தார் முதல்வர். அவரது கள ஆய்வு, கோவையின் வளர்ச்சியில் புதிய திருப்பத்தை உண்டாக்கி உள்ளது. "கோவையில் ஸ்டாலின் சிக்ஸர் அடித்திருக்கிறார்" என்ற எக்ஸ்பிரஸ் ஆங்கில நாளேட்டின் மனப் பூர்வமான வர்ணனை, கோவையில் எட்டுத்திக்கும் எதிரொலிக்கிறது !

கள ஆய்வின் ஒரு பகுதியாக, கழக உடன்பிறப்புகளையும் சந்தித்து, கட்சிப் பணி குறித்து ஆலோசனை நடத்தினார்.

அடுத்த கள ஆய்வு, விருதுநகரில் 9,10 தேதிகளில் நடைபெறும் என்றும் அறிவித்துவிட்டார் முதல்வர்.

இந்த நிலையில், 'புலியைப் பார்த்துச் சூடு போட்டுக் கொண்டதாம் பூனை' - என்ற கதையைப் போலல்லவா இருக்கிறது, எடப்பாடியின் அறிவிப்பு !

## 'வாட்ஸ் அப்'பில் வரும் செய்தி!

